# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2347/08 - 2023 අගෝස්තු මස 29 වැනි අඟහරුවාදා - 2023.08.29

*2347/08 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் பிரிவு 14 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக்
கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, ஓகத்து 28.


1A - PG 6471 — 07 (2023/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிமுறைகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் "**2023 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்**" என அழைக்கப்படுகின்றது.

2. 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிய 2336/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், அதன் கீழான எந்தவொரு செயற்பாடுகளுக்கும் பாதிப்பு இல்லாமல் இத்தால் இரத்து செய்யப்படுகிறது.

3. மேலுள்ள ஒழுங்குவிதி இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் 2023, யூன் 14 ஆந் திகதியிலிருந்து 2023, ஒகத்து மாதம் 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட எந்தவொரு பொருள் /பொருட்தொகையையும், 2023, ஒகத்து மாதம் 29 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில், இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமமொன்று கோரப்படாமல் சுங்க கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் விடுவிக்க இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு இத்தால் அதிகாரமளிப்படுகின்றது.

4. இந்த ஒழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

EOG 09 - 0042

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.